

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.09.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, 168வது வார்டு, கிண்டி, அரிமா சங்க லேபர் காலனி உயர்நிலைப் பள்ளி, 169வது வார்டு, சின்னமலை, புனித பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளி, 170 வது வார்டு, கோட்டூர்புரம், சென்னை உயர்நிலைப் பள்ளி, 172 வது வார்டு, கிண்டி, மடுவின்கரை, சென்னை மேல்நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், உயரலுவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அடுத்த நெமிலிச்சேரி பகுதியில் உள்ள ஜெயா தனியார் கல்லூரியில் 26 ஆம் ஆண்டு கராத்தே போட்டிநடைபெற்றது இதில் 700 மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர். 70 பிரிவுகளில் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் பங்கேற்ற போட்டியாளர்களுக்கும் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பரிசு வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் கல்லூரி தாளாளர் பேராசிரியர் கனகராஜ், சி.ஆர்.பி.எப் டிஜஜி ஜெயபாலன், தொழில்நுட்ப இயக்குனர் விஜயராகவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு, அரசு வழக்கறிஞர் எஸ்.மூர்த்தி, மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ், கராத்தே சங்கம் செயலாளர் தக்ஷிணாமூர்த்தி, தலைவர் ராஜா, சேர்மன், லட்சுமி காந்தன், நெமிலிச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்செல்வி, கவுன்சிலர் கே.சுரேஷ்குமார், திமுக மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கப்பல் சுரேஷ்குமார், பொறியாளர் எம்.மோகன், அக்னி மாசெ.ராஜேஷ், வாசுகி எட்வின், இ.வி.பி.பிரதீப், கு.பிரவின், உதயா உள்பட போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் கராத்தே போட்டியாளர்கள் பலர் உள்ளனர்.

### தாம்பரம் மாநகரம் 49வது வார்டு - முத்துரங்கம் பூங்காவில்

# புதிய உடற்பயிற்சிக் கூடம் - யோகா மையம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைக்கிறார்! எஸ்.ஆர்.ராஜா - டி.காமராஜ் பங்கேற்பு!

*சென்னை, செப்.11-*

தாம்பரம் மாநகரம் 49 வது வார்டு சண்முகம் சாலையில் உள்ள முத்துரங்கம் பூங்காவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் திறப்பு விழா இன்று (11.9.2023, திங்கள்கிழமை) மாலை 4.00 மணிக்கு திறப்பு விழா நிகழ்ச்சி எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் கழக பொருளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு திறந்து வைக்கிறார்.

மேலும் அதை தொடர்ந்து பழைய 9வது வார்டு புதிய 49வது வார்டில் உள்ள பகவத்சிங் தெருவிலும் 52வது வார்டு கன்னடபாளையத்தில் அமைத்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை டி.ஆர்.பாலு தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை திறந்து வைக்கிறார்.

அதன் பிறகு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., 52வது மாமன்ற உறுப்பினர்கள் எல்.பெரியநாயகம், வட்ட செயலாளர் விஜயன், கழக நிர்வாகிகளும், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெரும் திராளாக கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாலர் டி.காமராஜ் தெரிவித்துள்ளார்.

### மொராக்கோ நிலநடுக்கம்:

# பலி எண்ணிக்கை 2,000 ஆக உயர்வு!

*ரபாத், செப். 11 -*

வட ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான மொராக்கோவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 2,000 பேர் உயிரிழந்துவிட்டதாக அந்நாட்டு உள்துறை தெரிவித்துள்ளது.

மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.8 ஆக பதிவாகியுள்ளது.

மராகேஷுக்கு தென் மேற்கே 71 கிமீ (44 மைல்) தொலைவில் உள்ள ஹை அட்லஸ் மலைகளில் 18.5 கிமீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி 23:11 மணிக்கு (இந்திய நேரப்படி அதிகாலை 3:40) நிலநடுக்கம் ஏற்பட்டது. அதை தொடர்ந்து, 19 நிமிடங்களுக்குப் பிறகு 4.9 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. மரக்கேஷ் மற்றும் தெற்கில் பல பகுதிகளில் மக்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்தாலி, கிரீஸ், துருக்கி ஆகிய பகுதிகளில்தான் பெரும்பாலான நிலநடுக்க நிகழ்வுகள் நடக்கின்றன. இந்த நிலநடுக்கம் அட்லஸ் மலைத்தொடரைத் தொடர்ந்து மேல்நோக்கித் தள்ளும் உந்துதலுடன் தொடர்புடையதாக இருக்கும்.

வரலாற்று அடிப்படையில், 1900ஆம் ஆண்டுக்கு முன்பு வெள்ளிக்கிழமை இரவு நடந்த நிலநடுக்கத்தில் இருந்து 500கி.மீ தொலைவில் 6.0 அளவை விடப் பெரிய நிலநடுக்கம் எதுவும் பதிவாகவில்லை.

இத்தகைய தன்மை விளைவுகளை ஏற்படுத்துகிறது. மக்களிடையே நிலநடுக்கம் பற்றிய நினைவுகள் குறைவாக இருக்கும். தயார்நிலை நடவடிக்கைகளும் குறைவாக இருக்கும். இடிந்து விழும் கட்டடங்களுக்குள் மக்கள் அதிகமாக இருப்பதால், இரவில் ஏற்படும் நிலநடுக்கங்கள் பெரியளவிலான பலி எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறது. இந்த நிலநடுக்கம் உள்ளூர் நேரப்படி 11 : 11 மணிக்கு ஏற்பட்டது. அப்போதுபெரு ம்பாலான மக்கள் தொகை உறக்கத்தில் இருக்கும்.

அமெரிக்க நிலவியல் ஆய்வகம், மரணங்கள் மற்றும் பொருளாதார இழப்புகளின் சாத்தியமான அளவை மதிப்பிடும் மாதிரியை வைத்துள்ளது. அதன் பகுப்பாய்வுப்படி, இந்த நிகழ்வில் பலி எண்ணிக்கை நூற்றுக்க ணக்கில் இருந்து குறைந்தது ஆயிரங்களில் இருக்கலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலநடுக்கத்தால் பாதி க்கப்பட்டிருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அட்லஸ் மலைத்தொடரில் உள்ள தொலைதூர கிராமங்களுக்கு செல்வதில் பெரும் சிரமம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக பழைய கட்டடங்களால் ஆன கிராமங்களுக்கு மீட்புப் படையினர் செல்ல சில நாட்கள் ஆகலாம்.பட மூலாதாரம், REUTERS

மொராக்கோ கடற்கரையில் உள்ள கேனரி தீவுகள் மற்றும் அதன் கிழக்கு அண்டை நாடான அல்ஜீரியாவில் உள்ள மக்கள் கூட நிலநடுக்கத்தை உணர்ந்ததாக கூறுகிறார்கள்.

அதிர்ச்சியடைந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி மராகேஷின் தெருக்களில் தப்பிச் செல்லும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவியிருக்கின்றன.

நகரின் பழமையான சுவர்களும் நிலநடுக்கத்தால் பாதி க்கப்பட்டுள்ளன.

ட்விட்டர் சமூக ஊடகத்தில் நிலநடுக்கம் தொடர்பாக உறுதிப்படுத்தாத வீடியோ கிளிப்புகள் காணப்படுகின்றன. அதில், சேதமடைந்த கட்டிடங்கள், கட்டிடங்கள் குலுங்குவது, இடி பாடுகளுடன் கூடிய தெருக்கள் இடம் பெற்றுள்ளன.

### க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# வாலாஜாபாத் வடக்கு ஒன்றியக் கழகக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு அறிக்கை!

*காஞ்சிபுரம், செப். 11 -*

வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (11.9.2023) காலை 8 எம்.எம்.லெக்சி செட்டியார் பேட்டை (மீனாட்சி மருத்துவமனை எதிரில்) காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் வி.பழனி தலைமை வகிக்கிறார்.

ஆர்.கே. தேவேந்திரன், வி.வெங்கட்ராமன், டி.கவிதா டில்லிபாபு, எம்.சங்கர், கே.ஆறுமுகம், கே.பார்த்திபன், எம்.திருஞானசம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.எ. சிறப்புரையாற்றிட, சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., எஸ்.ராஜலட்சுமி குகராஜ், எஸ்.பி.பூபாலன், எம்.அருள்முருகன், என்.ஜெயபால், எஸ்.கே.சுரேஷ், ஆர்.கே. சசிகுமார், இ.அப்பன் மற்றும்பலர் கலந்து கொள்கின்றனர்.

அதுபோது செப்டம்பர் 15, இல் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கி தொடங்கி வைத்திட காஞ்சக்கு வருகை தருதல் குறித்து வேலூரில் செப்டம்பர் 17 இல் முப்பெரும் விழா, ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் அவர்களுக்கு வரவேற்பு அளித்தல் மற்றம் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கஇருப்பதால் கிளைக் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி பி.எம்.பாபு கேட்டுக் கொள்கிறேன்.

# சென்னை வடகிழக்கு மாவட்ட - பகுதி - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் அடங்கிய பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன் தலைமையில் இன்று 11.09.2023 திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் மாதவரத்திலுள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இதில் கீழ்காணும் பொருள் குறித்து பேச இருப்பதால் அவசியம் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: . முப்பெரும் விழா மற்றும் செப்டம்பர் 17ம் நாள் வேலூரில் நடைபெறும் விருது வழங்கும் விழாவிற்கு செல்லுதல். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு செப்டம்பர் 16ம் நாள் நடத்தப்படவிருக்கும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் .கழக ஆக்கப் பணிகள்.

மாதவரம் **எஸ். சுதர்சனம்** எம்.எல்.ஏ.

செயலாளர் - சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

### அமைச்சர் கே.என்.நேரு உத்தரவின் பேரில் சிக்கராயபுரத்தில் இருந்து மழைநீரை

# செம்பரம்பாக்கத்திற்குக் கொண்டு செல்ல நடவடிக்கை!

## சென்னை குடிநீர்வாரியம் அறிவிப்பு!

*சென்னை,செப்.11-*

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உத்தரவின்பேரில் காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு அருகே சிக்கராயபுரத்தில் உள்ள 25க்கும் மேற்பட்ட கல் குவாரிகளில் சுமார் 0.350 TMC மழைநீர் தேங்கியுள்ளது. இந்நீரினை செம்பரம்பாக்கத்திலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று, சுத்திகரித்த பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளுக்கு விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது.

தற்போது குவாரிகளில் தேங்கியுள்ள மழைநீர், செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் பணிகள் தொடங்கியுள்ளது. இதனால், வடகிழக்குப் பருவமழையின்போது கிடைக்கப் பெறும் மழைநீர் இக்கல்குவாரிகளில் சேமிக்கப்பட்டு இப்பகுதிக்கு அருகாமையிலுள்ள கிராமங்களுக்கு வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாமல் தடுத்திட முடியும்.

இக்குவாரிகளில் தேங்கியுள்ள மழை நீரினை DI இரும்பு குழாய்கள் மற்றும் HDPE பிளாஸ்டிக் குழாய்கள் மூலம் உயர் திறன் கொண்ட மோட்டார்கள் மற்றும் ஜெனரேட்டர் இயந்திரங்களைக் கொண்டு செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்குத் தேவையான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

இந்த குவாரிகளில் தேங்கியுள்ள மழைநீரினை நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய சுத்திகரிப்பு பணிகள் மேற்கொண்ட பின்னர் செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படும் என சென்னை குடிநீர் வாரியம் சார்பில் அறிவிக் கப்பட்டுள்ளது.

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு

# பல்லவபுரம் வடக்குப் பகுதிக் கழகக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ஜோசப் அண்ணாதுரை அறிவிப்பு

*பல்லவபுரம், செப். 11 -*

பல்லவபுரம் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான ஜோசப் அண்ணாதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (11.09.2023 - திங்கள்கிழமை) மாலை 5.00 மணியளவில் பல்லாவரம் துரைப்பாக்கம் ரோடியல் சாலையில் அமைந்துள்ள எஸ்.எம்.பி. திருமண மண்டபத்தில் (வேல்ஸ் சிக்னல் அருகில்) பகுதி கழக அவைத் தலைவர் ஆர். சேகர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள் ச.சிவக்குமார்,வ.முத்து , பி.அம்பிகா, எஸ்.நெடுஞ்செழியன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழக துணைச் செயலாளரும் பல்லவபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி கலந்து கொண்டு கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.

பொருள் : செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாள் விழா. செப்டம்பர் 15 தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் வருகை, செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்தநாள் விழா , வேலூரில் முப்பெரும் விழா

எனவே பகுதிக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அழைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2), வட்ட இளைஞர் அணி, மாணவர் அணி,மகளிர் அணி, செயலாளர்கள், பொது உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் ஜோசப் அண்ணாதுரை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஜி 20 உச்சிமாநாட்டுக்காக கட்டப்பட்டுள்ள

# பாரத் மண்டபத்தில் மழைநீர் புகுந்தது!

*புதுடெல்லி, செப். 11-*

ஜி 20 அமைப்பின் உச்சிமாநாடு, டெல்லியில் 2 நாள்கள் நடைபெற்றது. இதில் உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டுக்காக பாரத் மண்டபம் என்ற பெயரில் பிரமாண்ட கட்டிடத்தை ஒன்றிய அரசு கட்டியுள்ளது.

அதற்காக பல்லாயிரம் கோடி ரூபாயை ஒன்றிய அரசு செலவு செய்துள்ளது. இந்நிலையில் நேற்று இரவு முதல் டெல்லியின் பல்வேறு இடங்களில் மழை பெய்தது.

இதையடுத்து பாரத் மண்டபத்துக்குள் மழைநீர் குளம்போல தேங்கி கிடக்கிறது.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒன்றிய கழக செயலாளர் மோ.ரமேஷ் தலைமையில் தின்னை பிரச்சாரம் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் கரூர் முரளி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றி வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை குறித்து பொதுமக்களிடம் திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டார்கள். அருகில் மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், ப.சிட்டிபாபு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.ஹரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், சரஸ்வதி ரமேஷ், சரஸ்வதி சந்திரசேகர், கோபல், எம்.ரவி, பி.மாணிக்கம், கீதா முனுசாமி, பி.காமராஜ், ஏகாம்பரம், ஜெகஜீவன்ராம், ஜெயவேல், மணிகண்டன், உமாமணிகண்டன், பரிமளா சிவக்குமார், பா.டேவிட், பிரபாகரன், எம்.மணி, எஸ்.மாரி, வில்லியம் பிரகாஷ், தமிழ்மொழி, நிலாவதி ராஜேந்திரன், சதாசிவம், பி.கே.நாகராஜ், கு.பிரபாகரன், கோபிநாத், கே.ஜி.ஆர்.ராஜேஷ்குமார், உள்பட பலர் உள்ளனர்.



சென்னை வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆயிரம் மரக்கன்றுகள் நடும் தொடக்க விழா இராயபுரம் சி.எஸ். ஐ.நார்த் வீக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.பள்ளியின் வளாகத்தில் மியாவாக்கி முறையில் நன்கு வளர்ந்த மரங்கள் நடப்பட்டு குறுங்காடுகள் அமைக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா தலைமை வகித்தார்.சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் பழ. செல்வகுமார் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் லயன் தீனதயாளன்,துணை அமைப்பாளர் கு.சிவதனுஷ் செய்திருந்தனர். உடன் மு.கோபி,நா.சண்முகம், இரா.செந்தில்குமார், ஆர்.எம்.டி.ரவீந்திரன், திருமதி நாகம்மை, வசந்தகுமார், பாலசுப்பிரமணியம், ராமு,வேல்ராஜன், ஏகா. கார்த்திகேயன், பாலஉமாபதி, சாரதி பாலாஜி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.